www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Year ஆண்டு

- 1948 மலையக மக்களின் குடியுரிமை பறிப்பு - பாராளமன்றத்தில் மலையகத் தமிழர் பிரதிநிதிகள் பதவி பறிக்கப்பட்டது. 10 லட்சம் இந்திய வம்சாவழி மலையகதமிழர்கள் நாடற்றவர்களாக்கப்பட்டனர்.
- 1949 தமிழரசுக் கட்சி ஆரம்பம்
- 1956 தனிச் சிங்கள மொழிச்சட்டம் சிறீலங்கா அரசால் பிறப்பிக்கப்பட்டது
- 1957 பண்டா- செல்வா ஒப்பந்தம் - அதனை எதிர்த்து ஜே.ஆர். கண்டி யாத்திரை
- 1958 சிறீலங்கா அரசால் தமிழ் சிங்கள இனக்கலவரம் தூண்டிவிடப்பட்டது
- 1965 டட்லி - செல்வா ஒப்பந்தம்
- 1970 சிறீலங்கா அரசால் அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் தமிழ்பேசும் மக்கள் இரண்டாந்தரக் குடிமக்களாக்கப்பட்டனர். தமிழ் மாணவர்களின் கல்வியுரிமை தரப்படுத்தல் மூலம் தடுக்கப்பட்டது
- 1972 தமிழ் கட்சிகள் (தமிழரசுக் கட்சி, தமிழ் காங்கிரஸ், தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ்) இணைந்து தமிழர் கூட்டணி ஆரம்பிக்கப்பட்டது
- 1974 தமிழாராட்சி மகாநாட்டு முடிவில் 9 தமிழர்கள் சிறீலங்கா அரசால் படுகொலை செய்யப்பட்டனர்
- 1976 புத்தளம் பள்ளிவாசலில் முஸ்லீம்கள் சிறீலங்கா பொலிசாரால் கொலை செய்யப்பட்டனர்
- 1977 1977ம் ஆண்டு தனித் தமிழ் ஈழக் கோரிக்கையை வைத்து தேர்தலில் போட்டியிட்ட தமிழர் விடுதலை கூட்டணி பெருவெற்றி பெற்றது. தேர்தலின் பின் இனக்கலவரம் ஆரம்பம். யாழ் பழைய சந்தை எரிக்கப்பட்டது.
- 1979 பயங்கரவாதத் தடைச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு சிங்கள அரசால் பல தமிழ் இளைஞர்கள் காணாமல் போனார்கள். பின்பு அவர்களின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டது.
- 1980 யாழ் நூல்நிலையம் (தென்கிழக்கு ஆசியாவில் பெரியது) சிறீலங்கா இராணுவத்தால் எரிக்கப்பட்டது. மாவட்ட சபை தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி பெருவெற்றி.
- 1983 இனக் கலவரம் - வெலிக்கடைப் படுகொலை - ஏராளமான தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திய போராட்டத்தில் ஈடுபட ஆரம்பிக்கின்றனர்
- 1984 E.P.R.L.F., T.E.L.O., E.R.O.S., புலிகளாகிய அமைப்புக்கள் சேர்ந்து E.N.L.F. என்ற கூட்டமைப்பை ஏற்படுத்தியது. இது முழுத்தமிழினத்திற்கும் நம்பிக்கையை ஏற்படுத்திய நிகழ்வாகும்
- அநுராதபுரத்தில் சிங்களப் பொதுமக்கள் புலிகளால் படுகொலை- இந்நிகழ்வின் பின் எமது நியாயமன போராட்டத்தை பயங்கரவாதப் போராட்டமாக சிங்கள மக்களும், சர்வ தேசமும் எண்ணத் தொடங்கினர்.
- 1985 T.E.L.O. அமைப்பின் போராளிகள் புலிகளால் டயர் போட்டுக் கொழுத்தப்பட்டனர். அதன் தலைவர் சிறீசபாரத்தினம் புலிகளால் கொல்லப்படுகின்றார். இந்த நிகழ்சியின் பின்பு எல்லா அமைப்புகளில் இருந்தும் பலர் போராட்டத்தில் நம்பிக்கை இழந்து விலகி வெளிநாடுகளிற்குச் செல்ல ஆரம்பிக்கின்றார்கள். இதனால் போராட்டம் பலவீனமடையும் நிலை தோன்றுகின்றது
- 1986 E.P.R.L.F. க்கு எதிராக புலிகள் ஆயுதநடவடிக்கை . P.L.O.T. அமைப்பும் புலிகளால் தடை செய்யப்படுகின்றது
- 1987 இலங்கை - இந்திய ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இந்திய இராணுவம் இலங்கை வந்தது. முதலில் இந்திய இராணுவத்தை வரவேற்ற புலிகள் தமக்கே இடைக்கால நிர்வாக அதிகாரம் முழுவதும் தரவேண்டும் என்று கூறி இந்திய இராணுவத்துடன் போரை ஆரம்பித்தனர். இதற்கு இலங்கை அரசிடம் ஆயுதம், பணம் என்பன பெறப்பட்டது.
- 1988 மாகாணசபை தேர்தல் - Nov. 19/1989 E.P.R.L.F. & E.N.D.L.F. என்பன தேர்தலில் வெற்றி பெற்று முதல் தமிழ்பேசும் மக்களின் அரசினை திருகோணமலையில் அமைக்கின்றனர். **இதுவே எமது வரலாற்றில் ஈழத் தமிழருக்குக் கிடைத்த அதிக பட்ச அரசியல் வெற்றியாகும்.** இது ஒரு அமைப்பின் வெற்றி என்பதைவிட போராட்டத்தில் தியாகம் செய்த அனைத்துத் தமிழ்பேசும் மக்களின் வெற்றி என்பதே பொருத்தமாகும். **இந்த நடைமுறைத் தீர்வினை எமக்கு பெற்றுத்தர முயன்றமைக்காக அமரர் ராஜீவ் காந்தியை ஈழத்தமிழர் வரலாறு என்றும் நன்றியுடன் நினைக்கும்**
- 1989 இலங்கைத் தமிழர் தலைவர்களில் ஒருவரான அமிர்தலிங்கம் புலிகளால் படுகொலை, 30 வருடத்திற்கும் மேலான அரசியல் அநுபவசாலி, பல போராட்டங்களை முன்னின்று நடாத்திய மூத்த தலைவன் 28 வயது புலியால் துரோகி எனக் கொல்லப்படுகிறார்.
- 1990 இந்தியஇராணுவம் வெளியேற்றம். சிங்கள இராணுவத்துடன் இணைந்து புலிகள் ஏனைய தமிழ்அமைப்புகளை அழிக்கிறது
- தோழர் பத்மநாபா புலிகளால் படுகொலை. இவர் இந்தியாவினதும், சிங்கள முற்போக்கு சக்திகளினதும் நண்பராகையால் இக்கோரக்கொலையால் முழு ஈழத்தமிழர் போராட்டத்திற்குமே பாதிப்பு ஏற்பட்டது
- 1991 முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி புலிகளால் படுகொலை. இக்கொலையின் மூலம் ஈழத்தமிழரின் புனிதப் போராட்டமானது ஒரு பயங்கரவாதப் போராட்டமே என்று உலகம் முடிவெடுத்தது. ஈழத்தமிழர் இந்திய மக்களின் ஆதரவை முற்றாக இழந்தனர்.
- 1992 யாழ்ப்பாணத்தில் பரம்பரையாக வாழ்ந்த முஸ்லீம் மக்கள் புலிகளால் பலாத்காரமாக வெளியேற்றப்படுகின்றனர்
- 1996 புலிகள் தமது சுயநலத்திற்காக 5லட்சம் யாழ்ப்பாண மக்களை துப்பாக்கி முனையில் கிளிநொச்சிக்கு அழைத்துச்சென்று அங்கு வாழுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டனர்.